**செ. கு. எண்: 213** **நாள்:06.06.2012**

**<u>மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களது அறிக்கை</u>**

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் **புரட்சித் தலைவி** அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,

கடந்த நான்கு நாட்களாக வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிற பயிற்சி மாணவர்கள், பட்டமேற்படிப்பு மாணவர்கள் ஆகியோரை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. பேச்சுவார்த்தையின்போது தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கத்தின் நிர்வாகிகள், இந்திய மருத்துவ சங்கத் தலைவர், மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர், கூடுதல் செயலாளர், மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவக் கல்லூரி முதல்வர்கள் மற்றும் அரசு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அரசு மருத்துவர்கள், பட்டமேற்படிப்பு மாணவர்கள் மற்றும் பயிற்சி மாணவர்களின் கோரிக்கைகளான:

1. பட்ட மேற்படிப்பு மருத்துவரை தாக்கிய நபர்கள் மீது Hospital Protection Act–படி வழக்கு பதிவு செய்து துரிதமான நடவடிக்கை எடுப்பது;
2. மருத்துவமனை பாதுகாப்பிற்கென மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப் பெற்று, அந்தக் குழுவில் அரசு மருத்துவர்கள், பயிற்சி மாணவர்கள், பட்டமேற்படிப்பு மருத்துவர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் இடம் பெறுவர். அந்தக் குழுவின் அறிக்கை பெற்று, மருத்துவமனைகளில் பாதுகாப்புமுறை அமுல்படுத்துவது;
3. அவசரப் பிரிவுகளில் நோயாளிகளுடன் உடன் வருபவர்களின் (Attenders) எண்ணிக்கையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது;

என்பன ஏற்றுக்கொள்ளப்பட்டு, இக்கோரிக்கைகள் **மாண்புமிகு அம்மா** அவர்களின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனை ஏற்றுக்கொண்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட பயிற்சி மாணவர்களும் பட்ட மேற்படிப்பு மாணவர்களும் உடனடியாக பணிக்கு செல்வதாக உறுதியளித்தனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**